




புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வியாழன் ❖ ஏப்ரல். 27, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 202 ❖ ரூ.10


## உதயநிதி, சபரீசனிடம் இருந்து என்னைப் பிரிக்க 'பிளாக் மெயில்' கும்பல் முயற்சி

# டுபாக்கூர்

## எங்களின் பணிகளை சீர்குலைக்கும் நோக்கத்துடன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆடியோவை வெளியிட்டுள்ளனர்; நிதியமைச்சர் பி.டி.ஆர்



சென்னை, ஏப். 27-

"திமுக அரசின் இரண்டு ஆண்டுகால சாதனைகளை சில சக்திகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. எனவே அவர்கள் எங்களது சிறப்பான பணிகளை சீர்குலைக்கும் நோக்கத்துடன் நவீன தொழில்நுட்பத்தை மலிவான யுக்திக்காக பயன்படுத்தி இத்தகைய ஜோடிக்கப்பட்ட ஆடியோவை வெளியிட்டுள்ளனர்" என்று தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் விளக்கம் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,"எனதுஇந்த அறிக்கை ஏப்ரல் 22, 2023 அன்று நான் வெளியிட்ட எழுத்துபூர்வமான அறிக்கையின் தொடர்ச்சியாகும். இதனை தொடர்வதற்கு முன்னர் நவீன செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (AI) எப்படி Deep Fake போலி காணொளிகளை உருவாக்கும்என்பதற்கான சில உதாரணங்களை நான் காண்பிக்க விரும்புகிறேன். உதாரணங்களுக்கான இணைப்புகள்:

> Reality Check: Deepfake Videos in Delhi Elections? (https://t.co/PfY57t31Gl)

> It's Getting Harder to Spot a Deep Fake Video (https://t.co/PbFbwzQu9W)

> SASSY JUSTICE -Official White House Address| Deepfake (https://t.co/O3SSEuwCCy)

இத்தகைய உண்மை போன்றுதோற்றமளிக்கும் வீடியோக்களை கணினி மூலம் உருவாக்க முடியும் என்றால், ஆடியோ கோப்புகளை என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். நேற்று முதல் சமூக வலைதளங்களில் பரவிவரும் ஆடியோ கிளிப்பில் உள்ள எந்த செய்தியையும் எந்த ஒரு தனி நபரிடமோ, தொலைபேசி உரையாடலிலோ அல்லது தனிப்பட்ட உரையாடலிலோ நான் கூறவில்லை என்று உறுதியாக கூற விரும்புகிறேன். இந்த உரையாடல் தங்களுடன் நடந்தது என்று சொல்ல இதுவரை யாரும் முன்வராதது குறிப்பிடத்தக்கது. பாஜக மாநில தலைவர், யாரோ ஒருவர் குறிப்பிட்ட எந்த நபருடனும் சொல்லாத ஒன்றை, ஆடியோவாக வெளியிடும் அளவிற்கு கீழ்த்தரமாக இறங்கியுள்ளார். அவரது அரசியலின் தரம் இவ்வளவுதான்.

முதல்வர் ஸ்டாலின் தலைமையில், நாங்கள் ஆட்சிக்கு வந்த இந்த இரண்டு ஆண்டுகளில் பல வரலாறு காணாத சாதனைகளையும், புதிய திட்டங்களையும், ஒரு மனிதாபிமான நிர்வாகத்தையும் அளித்துள்ளோம். இதையே நாங்கள் திராவிட மாடல் ஆட்சி முறை என்று அழைக்கிறோம். இத்தகைய உயரிய இலக்குகளை அடைய நாங்கள் மிகப் பெரிய நிதி சீர்த்திருத்தங்களை மேற்கொண்டு கடந்த பத்தாண்டுகளில் செய்ய முடியாத சாதனைகளை இரண்டே ஆண்டுகளில் சாதித்துள்ளோம். இவை கடந்த பத்தாண்டுகளில் ஒன்றிய பாஜக அரசு செய்தவற்றைவிட மகத்தான சாதனைகளாகும். இதனை நேரடியாக ஒப்புநோக்கி பார்த்தாலே திராவிட மாடல் ஆட்சியின் செயல்வேகம் தெரியும்.

இத்தகைய சாதனைகளை சில சக்திகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. எனவே, அவர்கள் எங்களது சிறப்பான பணிகளை சீர்குலைக்கும் நோக்கத்துடன் நவீன தொழில்நுட்பத்தை, மலிவான யுக்திக்காக பயன்படுத்தி இத்தகைய ஜோடிக்கப்பட்ட ஆடியோவை வெளியிட்டுள்ளனர்.

முதல்வர், தமிழ்நாட்டின் ஒற்றை நம்பிக்கையாக மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டிற்கே வழிகாட்டும் ஒளியாக இருக்கிறார். எங்களது நம்பிக்கைநட்சத்திரமான விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் மகத்தான வரவேற்பை பெற்றுள்ளார். இதைப் பார்த்து அவரை அமைச்சராக்கவேண்டும் என்று தலைவரிடம் வலியுறுத்தவர்களில் நானும் ஒருவன். அனைவரது எதிர்பார்ப்பையும் விஞ்சி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். முதல்வரைப் போலவே கள ஆய்வும் சிறப்பாக நடத்தி வருகிறார். தமிழக விளையாட்டுத் துறையை நோக்கி உலகின் கவனத்தை ஈர்த்து வருகிறார்.

இப்படிப்பட்ட ஆற்றல் மிகு செயல்வீரரைக் குறித்து நான் எப்படி தவறாகப் பேசுவேன்? அதேபோன்று நமது திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து அமைச்சர்களும் ஓரணியாக ஒன்றுபட்டு மகத்தான சாதனைகளை எய்தும் வண்ணம் செயல்பட்டு வருகின்றனர். அவ்வாறு இருக்கையில் நான் ஏன் அவர்களைப் பற்றி தவறாகப் பேச வேண்டும்?

நான் அரசியலுக்கு வந்தது முதல் எனக்கு நல்லவழிகாட்டியாகவும், ஆலோசகராகவும், உறுதுணையாகவும் இருப்பவர் சபரீசன். எதிர்க்கட்சிகள் கூட உதயநிதி மற்றும் சபரீசன் மீது எந்த குற்றச்சாட்டும் வைக்கவில்லை. எனவே, அவர்கள் மீது களங்கம் சுமத்தும் வீண் முயற்சியில் இதுபோன்ற ஜோடிக்கப்பட்ட ஆடியோக்கள் உருவாக்கப்படுகின்றன. இவர்களிடம் இருந்து என்னைப் பிரிப்பதன் மூலமாக தங்களது அரசியல்எண்ணங்களை நிறைவேற்றத் துடிக்கிறது ஒரு பிளாக் மெயில் கும்பல். ஆனால், இதுபோன்ற கோழைத்தனமான முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது.

திமுக தொடங்கிய காலத்திலிருந்தே, ஒரே இயக்கம், ஒரே கட்சி, ஒரே குடும்பம் என அனைவரும் ஒற்றுமையுடன் இயங்கி வருகிறோம். இனிவரும் காலங்களிலும் அவ்வாறே தொடர்வோம். அறம் வெல்லும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கருத்துகளை தனது ட்விட்டர் பக்கத்தில் பேசி வீடியோவையும் அவர் வெளியிட்டுள்ளார்.

## ஆபரேஷன் காவேரிக்கு முழு ஒத்துழைப்பு பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் உறுதி




சென்னை , ஏப். 27-

சூடானில் உள்நாட்டுப் போர் காரணமாக நிலவிவரும் சிக்கலான நிலை காரணமாக அங்கு சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 400 பேர் உட்பட இந்திய குடிமக்களை அழைத்து வரும் "ஆபரேஷன் காவேரி" மீட்புப் பணிக்கு தமிழக அரசு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிடத் தயார் நிலையில் இருப்பதாக பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், சூடானில் உள்நாட்டு போர் காரணமாக நிலவிய சிக்கலான நிலை தற்போது முன்னேற்றமடைந்து வரும் நிலையில், இந்திய குடிமக்கள் சூடானில் இருந்து விரைவாக வெளியேறுவதற்கு வசதியாக இந்திய விமானப்படை விமானம் மற்றும் இந்திய கடற்படை கப்பல்கள் சூடான் அருகே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பது ஆறுதலளிப்பதாகத் தெரிவித்துள்ள முதல்வர், தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 400 பேர் வரை சூடானில் சிக்கித் தவித்து வருதாகவும் அவர்கள் இந்தியாவுக்குத் திரும்புவதற்கான உதவிகளை எதிர்பார்த்து இருப்பது குறித்து பிரதமரின் கவனத்திற்குத் தாம் கொண்டுவர விரும்புவதாகவும், சூடானில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களின் முதல் தொகுதி ஜஎன்எஸ் சுமேதா என்ற கப்பலில் இருக்கும் நிலையில் அவர்களின் உறவினர்களிடமிருந்து மாநில அரசுக்கு அவசர அழைப்புகள் வந்துகொண்டிருப்பதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுதொடர்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைக் குறித்த தகவல்களைப் பெறுவதற்கும், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழர்களை விரைவாக வெளியேற்றுவதற்கும் அனைத்து உதவிகளையும் வழங்கவும், வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் சூடானில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் இணைந்து செயல்படவும் தமிழ்நாடு அரசு தயாராக இருப்பதாகவும் முதல்வர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"ஆபரேஷன் காவேரி" மீட்புப் பணியானது, சூடானில் சிக்கித் தவிக்கும் தங்கள் உற்றார் உறவினர்களின்பாதுகாப்பாகத் திரும்புவதற்காகக் காத்திருக்கும் அனைத்து இந்தியர்களின் குடும்பங்களுக்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும்கொண்டுவரும் எனத் தாம் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ள முதல்வர், சூடானிலிருந்து இந்திய குடிமக்களை வெளியேற்றும் முயற்சிகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஒத்துழைப்பு வழங்கத் தயார் நிலையில் இருப்பதாக மீண்டும் தமது கடிதத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

## கழிவு நீரில் தத்தளிக்கும் புதுக்கோட்டை உழவர் சந்தை விவசாயிகளின் விளைப் பொருட்கள் நாசம் பொதுமக்கள் அச்சம்





புதுக்கோட்டை, ஏப். 27-

புதுக்கோட்டையில் நேற்று காலை 7 மணியளவில் திடீரென்று யாரும் எதிர்பாராத வகையில் ஏற்கனவே வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்ததை போல் மழை பெய்து வந்தது. அது பலருக்கு மகிழ்ச்சியை கொடுத்திருந்தாலும் சிலருக்கு மன கவலையை ஏற்படுத்தி இருந்தது.

மழை பெய்யுமா பெய்யாதா வெயில் வாட்டி வதைக்கின்றதே எப்படி வாழ போகின்றோம் கால்நடைகள், பறவைகள் தண்ணீருக்கு அழைகின்றதே இறைவா புதுக்கோட்டை பக்கம் கண் திறந்து பார் என்று ஏங்கித் தவித்தவர்களுக்கு நேற்று பெய்த மழையானது சற்று ஆறுதலை கொடுத்திருந்தது. இருப்பினும் கூலி வேலை உள்ளிட்ட அன்றாட பணிகளுக்கு செல்வோர் மட்டுமின்றி நடைபாதை வியாபாரிகள் மழை பெய்வதை ஏற்றுக்கொள்ளாமல் மனதுக்குள் குமுறிக்கொண்டு இருந்தனர் இயற்கையின் கொடையை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

இப்படியான சூழலில் புதுக்கோட்டை நகரில் அமைந்திருக்கும் உழவர் சந்தையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தாங்கள் விளைவித்த விவசாய பொருட்களை உழவர் சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். வழக்கம் போல் பணிகளை மேற்கொண்ட வியாபாரிகளுக்கு திடீர் மழையானது அதிர்ச்சியை கொடுத்தது. காய்கறி வாங்க சென்ற பொது மக்களுக்கும் பெரும் அதிர்ச்சி தான். திடீர் மழையால் உழவர் சந்தைக்குள் மழைநீர் மட்டும் இல்லாமல் கழிவு நீரும் தேங்கி கொண்டு அதன் மீது விவசாயிகளின் விளைப் பொருட்கள் குமித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டதை பார்க்கும்போது அனைவருக்கும் மிகுந்த பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. சரியான முறையில் மழை நீர், கழிவு நீர் வெளியேற வரத்து வாய்க்கால் ஏற்படுத்தாமல் ஏற்கனவே இருந்ததை பராமரிக்காமல் இருப்பதே இதற்கான காரணம். உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் விவசாய உற்பத்தி பொருட்கள் ரசாயனமின்றி ஆரோக்கியமாக விற்கப்படுவதை பொதுமக்கள் பெரிதும் விரும்பி வாங்கி வரும் சூழலில் கழிவு நீரோடு கழிவு நீரில் மூழ்க வைத்து யார் தான் அந்த பொருட்களை வீட்டிற்கு வாங்கிச் சென்று சமைத்து சாப்பிடுவார்கள்? இதை நகராட்சி நிர்வாகமும் மாவட்ட நிர்வாகமும் உடனடியாக கவனத்தில் கொண்டு இனிவரும் நாட்களிளாவது உழவர் சந்தைக்கு வரத்து வாரி அமைத்து மழை நீர், கழிவு நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது புதுகை வரலாறின் எதிர்பார்ப்பு.

## "கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஊழல் மிகும், கலவரம் நடக்கும்" அமித் ஷா



பெங்களூரு , ஏப். 27-

"கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் அங்கு ஊழலும், வாரிசு அரசியலும், வன்முறைகளும் முன் எப்போதும் இலலாத அளவுக்கு அதிகரிக்கும்" என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவையின் 224 தொகுதிகளுக்கும் வரும் மே 10 ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. மே 13 ஆம் தேதி தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்படுகின்றன. இந்நிலையில் அங்கு அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது.

கர்நாடகா மாநிலம் பெலகாவி மாவட்டத்தில் உள்ள டெர்டால் பகுதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான அமித் ஷா கலந்து கொண்டு வாக்குகள் சேகரித்தார்.

அப்போது அவர் பேசியதாவது: வரவிருக்கும் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால் கர்நாடகா மாநிலத்தின் வளர்ச்சி ரிவர்ஸ் கியரில் செல்லும். எனவே அரசியல் ஸ்திரத்தன்மை தரும் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். புதிய கர்நாடகம் வேண்டுமென்றால் மக்கள் பாஜகவுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும்.

இந்தத் தேர்தலில் நீங்கள் தேர்வு செய்யப்போவது வெறும் வேட்பாளர்களை மட்டும் அல்ல கர்நாடகாவின் எதிர்காலத்தைத் தேர்வு செய்யப் போகிறீர்கள். நீங்கள் பாஜகவுக்கு வாக்களித்தால் கர்நாடகாவில் எதிர்காலம் பிரதமர் மோடியின் வசம் செல்லும். கர்நாடகாவில் அரசியல் ஸ்திரத்தன்மையையும், வளர்ச்சியையும் கொண்டுவர பாஜகவுக்கு வாக்களியுங்கள். இவ்வாறு அமித் ஷா பேசினார்.

தொடர்ந்து பாகல்கோட்டில் பிரச்சாரம் செய்த அமித் ஷா, "லிங்காயத் சமூகத்தைச் சேர்ந்த ஜெகதீஷ் ஷெட்டர், லக்ஷ்மண் சாவடி பாஜகவிலிருந்து காங்கிரஸுக்கு சென்றது அந்தக் கட்சிக்கு எவ்விதத்திலும் பலனளிக்கப் போவதில்லை.

காங்கிரஸ் எப்போதுமே லிங்காயத் சமூகத்தை அவமதித்துள்ளது.எத்தனையோ ஆண்டுகள் கர்நாடகாவில் ஆட்சியில் இருந்தும்கூட எஸ்.நிஜலிங்கப்பா, வீரேந்திர பாட்டீல் என இரண்டு முதல்வர்கள் மட்டுமே காங்கிரஸ் சார்பில் லிங்காயத் சமூகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படனர்.

ஆனால் இப்போது ஜெகதீஷ் ஷெட்டர், லக்ஷ்மண் சாவடியை முன்னிறுத்தி வாக்கு சேகரிக்கின்றனர். எதிர்க்கட்சியிலிருந்து வந்தவர்களை வைத்து வாக்கு சேகரிப்பதே காங்கிரஸ் கட்சியில் அடையாள முகங்கள் இல்லாத வெற்றிடத்தைக் காட்டுகிறது.

முன்னர் எடியூரப்பா தலைமையிலான பாஜக ஆட்சியைக் கவிழ்க்க காங்கிரஸ் மதச்சார்பற்ற ஜனதா தளத்துடன் கைகோத்தது. ஆனால் அதன் பின்னர் அக்கட்சிக்குப் போக்கு காட்டியது. இதையெல்லாம் கர்நாடகா மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அதேபோல் முஸ்லிம்களுக்கு 4 சதவீதம் இட ஒதுக்கீடு மாநில அரசால் ரத்து செய்யப்பட்டது ஒரு நல்ல முடிவே. நான் எப்போதுமே மதம் சார்ந்த இட ஒதுக்கீடுகளை ஊக்குவித்ததில்லை. ஆனால் காங்கிரஸ் அதை முன்னிறுத்தி வாக்கு சேகரிக்கிறது. இதனால் யாருடைய இட ஒதுக்கீடு பறிபோகும் என்பதை மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். வொக்கலிகர்கள், லிங்காயத்துகள், தலித்துகள், பழங்குடிகள், இதர பிற்படுத்தப்பட வகுப்பினர் என யாருடைய இட ஒதுக்கீட்டைப் பறித்து முஸ்லிம்களுக்கு 4 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று மக்கள் சிந்திக்க வேண்டும் " என்றார்.

## மது அருந்த பணம் கேட்டு கொலை குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து புதுகை நீதிமன்றம் தீர்ப்பு



புதுக்கோட்டை , ஏப். 27-

புதுக்கோட்டையில் மது அருந்த பணம் கேட்டு தகராறு ஏற்பட்டதில் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை மற்றும் அபராதம் விதித்து புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

புதுக்கோட்டை காந்தி நகர் எட்டாம் வீதியை சேர்ந்தவர் ரங்கன் மகன் ரவி இவரும் இம்மனம்பட்டியை சேர்ந்த கருப்பையா மகன் சுந்தரம் என்பவரும் நண்பர்களாக இருந்து வந்துள்ளனர். கடந்த 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 ஆம் தேதி சுந்தரம் ரவியிடம் மது அருந்த பணம் கேட்டதாகவும் அப்போது ஏற்பட்ட தகராறில் ரவியை சுந்தரம் அறிவாளால் வெட்டியுள்ளார்.

பின்னர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். சிகிச்சையில் இருந்த போது ரவி கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் கணேஷ் நகர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை புதுக்கோட்டை மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் குற்றம் நிரூபிக்கப் பட்டதையடுத்து குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையும் ரூபாய் இரண்டரை லட்சம் அபராதமும் அபராத தொகையை இறந்தவரின் குடும்பத்திடம் ஒப்படைக்கவும் நீதிபதி சத்யா உத்தரவிட்டார். இதனை அடுத்து குற்றவாளி சுந்தரம் திருச்சி மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அடைக்கப்பட்டார்.

# இன்று

# 27-4-23




வெட்பாம்பூ கஷாயம் குடித்து வந்தால் உடல் வலிமை பெறும்.

சக வருடம் 1945 வைசாகம் 07

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது சித்திரை 14 | APR - THU வியாழன் | ஷவ்வால் 6 | இராசிபலன் |
| | | வளர்பிறை 117 / 248 | |

வளர். ஸப்தமி 21.58 (மா. 02.46) புனர்பூசம் 05.08 (கா. 08.02) தியாஜ் 27.19 அகல் 30.48 அமிர்த. சுபமுகூர்த்தம். மதுரை மீனாட்சி சொக்கநாதர் வேடர்பறிலீலை. திருக்கடவூர் சிவபெருமான் திருக்கல்யாணம். திரிசிராமலை ஸ்ரீதாயுமானவர் பூத வாகனத்திலும் அம்பாள் கமல வாகனத்திலும் பவனி.

| | நல்லநேரம் | கௌரி.நல்.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.30-11.30 | 12.30-1.30 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ----------- | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்; மேஷ லக்னம் இருப்பு நா. 2 வி. 28; சந்திராஷ்டமம் மூலம்; கரணம் : 3-4.30; சூரிய உதயம் : 5.59

நன்றுதே மாறி பொறி காக்காது.

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | புகழ் |
| மிதுனம் | அன்பு |
| கடகம் | மகிழ்ச்சி |
| சிம்மம் | நற்செயல் |
| கன்னி | அச்சம் |
| துலாம் | மகிழ்ச்சி |
| விருச்சி | எதிர்ப்பு |
| தனுசு | விவேகம் |
| மகரம் | துயரம் |
| கும்பம் | ஊக்கம் |
| மீனம் | ஏமாற்றம் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

" உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்."




# அரியலூர் புத்தகத் திருவிழா மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் திண்டுக்கல் லியோனி பட்டிமன்றம்



அரியலூர், ஏப்.27-

அரியலூர் புத்தக திருவிழா மூன்றாம் நாள் நிகழ்ச்சியில், திண்டுக்கல் லியோனி தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது.

அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலில் நடைபெறும், புத்தகத் திருவிழா மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக, காலையில் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் செல்லப்பிராணிகள், (நாய்கள்)கண்காட்சி நடைபெற்றது, அதில் தேர்வு பெற்ற செல்லப் பிராணிகளின் உரிமையாளர்களுக்கு, மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரமண சரஸ்வதி பரிசுகளை வழங்கினார். அதைத் தொடர்ந்து மாலை 7 மணி அளவில், தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பெரிதும் காப்பது அன்றைய கலைகளே, இன்றைய கலைகளே என்கிற தலைப்பில், திண்டுக்கல் ஐ. லியோனி தலைமையில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது, அதன் பிறகு மாதிரி பள்ளிகளின் மண்டல ஒருங்கிணைப்பாளர் ராச பாண்டியன் கருத்துரை பேசினார்.

அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ரமண சரஸ்வதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பூங்கோதை, வருவாய்கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், தாசில்தார் கண்ணன், மாவட்ட ஆட்சியரக தாசில்தார்கள் குமரய்யா, சந்திரசேகர், கிருஷ்ணமூர்த்தி, தமிழ் பண்பாட்டு பேரமைப்பு நிர்வாகிகள் புலவர் இளங்கோ, நல்லப்பன் ஆசிரியர், பாலகிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



▶ தென்காசி மாவட்டம் திமுக தலைவர், தமிழக முதல்வரிடம் தலைமை திமுக நிர்வாகிகளாக புதிதாக நியமனம் செய்யப்பட்டவர்களில் ஒருவரான திமுக மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் சிவகிரி மருத்துவர்செ.சு.செண்பக விநாயகம் சந்தித்து வாழ்த்துக்களை பெற்று கொண்டார்.திமுக பொதுச் செயலாளர் நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன்,திமுக அமைப்பு செயலாளர்ஆர்.எஸ் பாரதி, திமுக மாநில விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர்தயாநிதி மாறன், திமுக கொள்கை பரப்பு செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன், திமுக மாநில மருத்துவ அணித் தலைவர் மாநிலங்களவை உறுப்பினர் மருத்துவர்கனிமொழி,என்.வி.என். சோமு, திமுக மாநில மருத்துவ அணிச் செயலாளர் ஆயிரம் விளக்கு சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் மற்றும் மாநில நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர், புதிய மாநில நிர்வாகிகள் அனைவருக்கும் தமிழக முதல்வர் திமுக தலைவர் வாழ்த்துக்கள் வழங்கி பாராட்டினார்




# சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட் தாக்குதலில் 10 காவலர்கள் உள்பட 11 பேர் உயிரிழப்பு



ராய்ப்பூர் , ஏப்.27-

சத்தீஸ்கரின் தண்டேவாடா மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 10 காவலர்கள் உள்பட 11 பேர் உயிரிழந்தனர்.

தண்டேவாடா மாவட்டத்தின் அரண்பூர் பகுதியில் மாவோயிஸ்டுகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலைஅடுத்து,மாவட்ட காவல் படையை (DRG) சேர்ந்த போலீசார் ஒரு வேனில் அங்கு சென்றனர். தேடுதல் வேட்டை முடிந்து அவர்கள் திரும்போதும் அரண்பூர் சாலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஐஇடி குண்டு வெடித்துள்ளது. இதில் 10 காவலர்கள், ஒரு வாகன ஓட்டி ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் பூபேஷ் பெகல், ''காவலர்கள் உயிரிழந்த சம்பவம் மிகுந்த வேதனையை ஏற்படுத்தி இருக்கிறது. அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நக்ஸல்களுக்கு எதிரான சண்டை இறுதிக்கட்டத்தில்உள்ளது. அவர்களை ஒருபோதும் விட மாட்டோம்" என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, முதல்வர் பூபேஷ் பெகலுடன் உள்துறை அமைச்சர் அமித் ஷா தொலைபேசியில் பேசியுள்ளார். அப்போது, மாநில அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என அவர் உறுதி அளித்துள்ளார்.

சம்பவம் நிகழ்ந்தஇடம், தலைநகர் ராய்ப்பூரில் இருந்து 450 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மாவட்ட காவல் படை என்பது தண்டேவாடா மாவட்டத்தில் உள்ள மாவோஸ்டுகளின் செயல் பாடுகளைமுடக்கும்நோக்கில் மாநில காவல் துறையால் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சீர்காழி சட்டைநாதர் கோயிலில் கிடைத்த

# சிலைகள், செப்பேடுகள் குறித்து அருங்காட்சியக குழுவினர் மீண்டும் ஆய்வு



சீர்காழி, ஏப். 27 -

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் தருமபுர ஆதீனத்திற்கு சொந்தமான பழமையான ஸ்ரீ சட்டைநாதர் சுவாமி திருக்கோயிலில் கண்டெடுக்கப்பட்ட ஐம்பொன் சிலைகள், செப்பேடுகள் கோயிலின் பாதுகாப்பு அறையில் வட்டாட்சியர் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு போலீசார் பாதுகாத்து வருகின்றனர்.

17-ம் தேதி இந்து சமய அறநிலையத்துறை ஓலைச்சுவடி பராமரிப்பு, பாதுகாப்பு நூலாக்க திட்ட 6 பேர் கொண்ட குழுவினர் சீர்காழி சட்டநாதர் கோயிலுக்கு வருகை புரிந்து கண்டெடுக்கப்பட்ட செப்பேடுகளை ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது இதுவரை தமிழ்நாட்டில் ஓலை சுவடியில் எழுதிய பதிகங்கள் கிடைக்கப்பட்டுள்ளதாகவும், முதன்முறையாக அதிக அளவு பதிகங்கள் செப்பேடுகளில் எழுதப்பட்டு தற்போது இங்கு சீர்காழியில் தான் கிடைத்துள்ளதாகவும் அதிகாரிகள் தரப்பினர் தெரிவித்தனர்.

விலைமதிப்பு மிக்க ஐம்பொன் சிலைகள் கோயிலில் வைக்கப்பட்டுள்ளதால் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சுவாமி சிலைகள் வைக்கப்பட்டுள்ள இடத்தில் பாதுகாப்பு கருதி கூடுதலாக இரும்பு கிரில் கேட் பொருத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று நாகப்பட்டினம் அருங்காட்சியகம் காப்பாட்சியாளர் மணிமுத்து தலைமையிலான குழுவினர் கோயில் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள் குறித்து சீர்காழி கோட்டாட்சியர் அர்ச்சனா மற்றும் வட்டாட்சியர் செந்தில் முன்னிலையில் ஆய்வு செய்து வருகின்றனர்.

சிலைகள் மற்றும் செப்பேடுகள் எந்த ஆண்டை சேர்ந்தவை, அளவு, உயரம், அகலம், எடை உள்ளிட்ட விபரங்களை சேகரித்து அவற்றின் விபரங்களை அரசுக்கு அறிக்கையாக தாக்கல் செய்ய உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# புதுக்கோட்டை குமாரராஜா மழலையர் தொடக்கப்பள்ளியில் மழலை குழந்தைகளுக்கான பட்டமளிப்பு விழா



புதுக்கோட்டை, ஏப்.27-

புதுக்கோட்டை பூங்காநகர் குமாரராஜா மழலையர் தொடக்கப்பள்ளியில் மழலை குழந்தைகளுக்கான பட்டமளிப்பு விழாவுக்கு, பள்ளியின் தாளாளர் மூத்த கல்வியாளர் பி.கருப்பையா தலைமை வகித்தார், தலைமை ஆசிரியை அன்னபூரணி அனைவரையும் வரவேற்றார், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வெங்கடேஸ்வரா கல்வியியல் கல்லூரி முதல்வர் இளங்கோவன் குழந்தைகளுக்கான பட்டங்களை வழங்கி பாராட்டினார், பின்னர் மூத்த கல்வியாளர் பி.கருப்பையா மழலையர்களையும் பெற்றோர்களையும் வாழ்த்தி பேசினார்.

அவர் பேசியதாவது குழந்தைகளின் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமை, பெற்றோர்கள் தங்கள் வேலைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அருகிலிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும், குழந்தைகள் சொல்வதை காது கொடுத்து பெற்றோர்கள் கேட்க வேண்டும், பிள்ளைகளோடு அன்பாக நட்பாக பேசிப் பழகும் பெற்றோர்களையே மாணவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள், பிள்ளைகளின் வெற்றியை உறுதி செய்வது பெற்றோர்களின் கைகளின்தான் உள்ளது, பள்ளியை விட்டு வீடு வந்து சேரும் குழந்தைகளிடம் பெற்றோர் கலந்துரையாட வேண்டும், தங்களது வேலைகளை ஒதுக்கி வைத்துதினமும் இரண்டு மணி நேரம் பாடங்களை கற்க செய்ய வேண்டும், குழந்தைகளுக்கு வழங்க வேண்டியஉணவுகள்தவிர்க்க வேண்டிய உணவுகளில் கவனமாக இருக்க வேண்டும், குழந்தைகள் செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க வைக்க வேண்டும், பெற்றோர்கள் கவனத்தில் கொண்டு தங்களது குழந்தைகளை ஆரோக்கிய மானவர்களாக வளர்த்தெடுக்க வேண்டியது தலையாய கடமை, அன்பாக நட்பாக பேச வேண்டும் இங்குள்ள பெற்றோர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன் என்றும் கூறினார் நிகழ்வில் கல்வியாளர்கள் சமூக ஆர்வலர்கள் மாணவ , மாணவிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர், விழா ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியைகள் சிறப்புடன் செய்தனர்.

# மழையூர் காவல் நிலையம் தொடங்கப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவு : ஆய்வாளர் காவல் நிலையமாக மாற்ற கோரிக்கை



கறம்பக்குடி,ஏப்.27-

கறம்பக்குடி அருகே மழையூரில் காவல் நிலையம் தொடங்கப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது, ஆய்வாளர் காவல் நிலையமாக மாற்ற பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூரில் ஆங்கிலேயர்களால் 26/04/1923 ம்ஆண்டுபுறக்காவல்நிலையம் தொடங்கப்பட்டது, இந்த புறக்காவல் நிலையம் திருச்சி மாவட்டம் மணப்பாறை காவல் நிலையத்தின் கீழ் செயல்பட்டு வந்தது,மேலும் இங்கு காவலர் பயிர்ச்சி மையமும், காவலர் குடியிருப்புகளும் இருந்தது,நீண்ட காலமாக புறக்காவல் நிலையமாக செயல்பட்டு வந்ததை கடந்த 2012ம் ஆண்டு உதவி ஆய்வாளர் காவல்நிலையமாக உயர்த்தபட்டது.

இந்த காவல் நிலையம் 50 குக்கிராமங்களை கொண்டுள்ளது,தற்போது காவல் நிலைய கட்டிடமும்,காவலர்கள் குடியிருப்புகளும் புதியதாக கட்டப்பட்டு வருகிறது, நூறு ஆண்டுகளை கடந்த மழையூர் காவல்நிலையத்தை ஆய்வாளர் காவல்நிலையமாக தரம் உயர்த்தி தர அரசுக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## போரூர்-ஆழ்வார்திருநகர்-வடபழனி உள்பட

# 500 இடங்களில் டாஸ்மாக் கடைகள் விரைவில் மூடப்படுகிறது

சென்னை , ஏப்.27-

தமிழகத்தில் பள்ளி-கல்லூரிகள், கோவில்கள் அருகில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் கடைகளை மூட வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. அதே நேரத்தில் டாஸ்மாக் கடைகளை படிப்படியாக குறைக்க வேண்டும் என்றும் அரசியல் கட்சியினர் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு டாஸ்மாக் கடைகளை படிப்படியாக குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. இதன் படி சட்டசபையில் கூட்டம் நடைபெற்றபோது அமைச்சர் செந்தில் பாலாஜி, தமிழகத்தில் 500 மதுபான சில்லரை விற்பனை கடைகள் மூடப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டார்.

இதைத்தொடர்ந்து சென்னை உள்பட அனைத்து இடங்களிலும் பள்ளி, கல்லூரிகள் மற்றும் கோவில்களின் அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளை கணக்கெடுக்கும் பணி தொடங்கி உள்ளது. 50 மீட்டர் இடைவெளியில் செயல்படும் டாஸ்மாக் கடைகளும் மூடப்பட வேண்டிய கடைகளின் பட்டியலில் உள்ளது. அது போன்று குறைந்த இடைவெளியில் உள்ள கடைகளும் மூடப்பட உள்ளன. தமிழகத்தில் அனைத்துமாவட்டங்களிலும் இதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும் பள்ளிகள் மற்றும் கோவில்களின் எதிரில் உள்ள டாஸ்மாக் கடைகளை மூடக்கோரி டாஸ்மாக் நிர்வாகத்துக்கு பல்வேறு புகார்கள் சென்றுள்ளன.

இதையடுத்து அது போன்ற கடைகளும் மூடப்படவேண்டிய டாஸ்மாக் கடைகளின் பட்டியலில் இருப்பதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் போரூர் டோல்கேட் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடை (எண்.9170), பள்ளிக்கூடம் அருகில் செயல்பட்டு வருவதாக புகார்கள் கூறப்பட்டு வந்தன. இதேபோன்று போரூரில் இருந்து குன்றத்தூர் செல்லும் சாலையில் உள்ள டாஸ்மாக் கடையும் (எண்9043) பள்ளி எதிரில் உள்ளது. இந்த 2 கடைகளும் மூடப்பட வேண்டிய டாஸ்மாக் கடைகளின் பட்டியலில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. வடபழனி ஏ.வி. எம். ஸ்டூடியோ பகுதியில் பெருமாள் கோவில் எதிரில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் கடை (எண்506), விருகம்பாக்கம், ஆழ்வார் திருநகர் பகுதியில் பள்ளி எதிரில் உள்ள டாஸ்மாக் கடை (எண்8870) மற்றும் செங்குன்றம், அலமாதி ஆட்டந்தாங்கல் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடை ஆகியவையும் மூடப்பட வேண்டிய கடைகளின் வரிசையில் இருப்பதாக டாஸ்மாக் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதேபோன்று திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் பள்ளி, கோவில்கள் அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளை மூடும் பணி நடைபெற்று வருகிறது. இந்த நடவடிக்கைகள் இன்னும் சில தினங்களில் நிறைவுபெற்று பிரச்சினைக்குரிய கடைகளும் மூடப்படும் என்று தெரியவருகிறது.

# நாட்டின் ஒற்றுமைக்கு சவுராஷ்டிரா தமிழ் சங்கமம் வலு சேர்க்கிறது நிறைவு விழாவில் பிரதமர் மோடி பேச்சு



புதுடெல்லி , ஏப்.27-

குஜராத்தில் நடைபெற்ற சவுராஷ்டிரா - தமிழ் சங்கமம், நாட்டின் ஒற்றுமைக்கு வலு சேர்க்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள சவுராஷ்டிரா மொழி பேசும் மக்களை, அவர்களின் பூர்விக இடமான குஜராத்தின் சவுராஷ்டிரா பகுதிக்கு அழைத்துச் செல்லும் சவுராஷ்டிரா - தமிழ் சங்கமம் நிகழ்ச்சி கடந்த 17-ம் தேதி தொடங்கி நேற்றுடன் நிறைவு பெற்றது. நிறைவு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, காணொலி காட்சி வாயிலாக பங்கேற்று உரையாற்றினார். அப்போது, ''சர்தார் வல்லபாய் படேலுக்கும் மகாகவி சுப்ரமணிய பாரதிக்கும் இருந்த தேசிய உணர்வு, இந்த சவுராஷ்டிரா - தமிழ் சங்கமம் நிகழ்ச்சியின் மூலம் மீண்டும் உயர்பெற்றிருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள், நமது நாட்டின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துகின்றன. எனவே, இந்த நிகழ்ச்சியின் மூலம் சர்தார் வல்லபாய் படேலின் ஆசி நம் அனைவருக்கும் கிடைத்திருக்கிறது.

ஒரே பாரதம், உன்னத பாரதம் என்பதை பார்க்கத் துடித்த நமது முன்னோர்களான சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் கனவை இந்த நிகழ்ச்சி நனவாக்கி இருக்கிறது. சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டிருக்கும் புதிய கலாச்சார பாரம்பரியத்தின் எடுத்துக்காட்டுக்களாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் திகழ்கின்றன.

நாட்டிற்கு தற்போது தேவை நல்லிணக்கம்தான். நமக்குள் ஒத்துழைப்பு இருக்க வேண்டுமே அன்றி, கலாச்சார மோதல்கள் அல்ல. நமக்குத் தேவை சங்கமங்கள்தான்; போராட்டங்கள் அல்ல. வேறுபாடுகளை கண்டறிவது நமக்குத் தேவையில்லை. உணர்வுபூர்வமான ஒற்றுமைதான் நமக்குத் தேவை. இந்தியாவின் தனித்துவமான பாரம்பரியமே, அனைவரையும் இணைத்துக்கொள்வது; ஏற்றுக்கொள்வது; அனைவோடும் இணைந்து முன்னேறிச் செல்வதுதான்.

பல நூற்றாண்டுகளாக இங்கே சங்கமங்கள் நிகழ்ந்திருக்கின்றன. கும்பமேளா என்பதே நமது சங்கமம்தான். பல்வேறு சிந்தனைகள், கலாச்சாரங்களின் சங்கமம் அது. நாட்டில் நிகழ்ந்த இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுமே நமது ஒற்றுமைக்கு முக்கிய பங்காற்றி இருக்கின்றன. நாடு சுதந்திரம் அடைந்து தற்போது 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. சவுராஷ்டிரா - தமிழ் சங்கமம் போன்ற புதிய பாரம்பரியத்தை நாம் தற்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சங்கமம் நர்மதை மற்றும் வைகையின் சங்கமம். இது தாண்டியா நடனம் மற்றும் கோலாட்டத்தின் சங்கமம்'' என்று பிரதமர் நரேந்திர மோடி உரை நிகழ்த்தினார்.

# செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியத்தில் திமுக வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்



செம்பனார்கோவில், ஏப். 27 –

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்ற தொகுதி செம்பனார் கோவில் தெற்கு ஒன்றியம், தரங்கம்பாடி பேரூராட்சி திமுக வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பூம்புகார் சட்டமன்ற தொகுதி பார்வையாளரும், மாநில இளைஞரணி திமுக துணை செயலாளர் இளையராஜா முன்னிலை வகித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சங்கரன் பந்தல் கடை வீதியில் உள்ள ரமாட்டி திருமண மண்டபத்தில் செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அப்துல் மாலிக் செய்திருந்தார்.

கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை மற்றும் புதியதாக ஒரு கோடி உறுப்பினர்களை சேர்ப்பது மற்றும் கட்சிப் பணி குறித்தும் மாவட்ட திமுக செயலாளர் சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட திமுக துணை செயலாளர் மு.ஞானவேலன், செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர்கள் பி.எம். அன்பழகன், அமுர்த விஜயகுமார், தரங்கை பேரூராட்சி திமுக செயலாளர் முத்துராஜா மற்றும் திமுக ஊராட்சி மன்றதலைவர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் விஏஓ படுகொலையை கண்டித்து சீர்காழியில் விஏஓ-க்கள் ஆர்ப்பாட்டம்



சீர்காழி, ஏப். 27 –

தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாட்டில் மணல் கொள்ளையை தட்டிக்கேட்ட கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் வெட்டி கொலை செய்யப்பட்டதை கண்டித்துசீர்காழிதாலுகா அலுவலகம் முன்பு கிராம நிர்வாக அலுவலர்கள் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். வட்ட முகவர் மணிமாறன், வட்ட செயலாளர் நவநீதன், மகளிர் அணி தலைவி ரேவதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் மணிமாறன், ரவி ஆகியோர் கிராம நிர்வாக அலுவலர் வெட்டி படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து முழக்கம் எழுப்பினர்.

# பூம்புகார் சுற்றுலா தளத்தை ரூ.23.60 கோடி மதிப்பில் மேம்படுத்தும் பணி: அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார்



சீர்காழி, ஏப். 27 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே 15 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பூம்புகாரின் பண்டைய கால வரலாற்றை நினைவூட்டும் வகையில் 1973 ஆம் ஆண்டு பூம்புகார் கடற்கரையில் சுற்றுலா வளாகத்தை முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவாக்கினார். இதில் சிலப்பதிகார கலைக்கூடம், பாவை மன்றம், நெடுங்கள் மன்றம், இலஞ்சி மன்றம், கொற்றவை பந்தல் போன்ற நினைவு சின்னங்கள், கலங்கரை விளக்கம், தொல்லியல் துறை சார்ந்த அருங்காட்சியங்கள் ஆகியவை உள்ளன.

இந்த சுற்றுலா தளத்திற்கு மாதம்தோறும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இந்த சுற்றுலா வளாகம் பராமரிப்பு இன்றி சிதிலமடைந்ததுடன், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டு இருந்த சங்கு சிற்பி வடிவிலான விடுதிகள் முழுவதுமாக சேதமடைந்தன. இதனை அடுத்து சுற்றுலா தளத்தை மேம்படுத்த வேண்டுமென்ற பொது மக்களின் தொடர் கோரிக்கையை ஏற்று கடந்த ஆட்சி காலத்தில் ரூ.2.57 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் தொடங்கி முடிவடையும் தருவாயில் உள்ளது.

இந்நிலையில் பூம்புகார் சுற்றுலா தளத்தை மேம்படுத்துவதற்கு தமிழக அரசு சுற்றுலாத்துறை ரூ. 23 கோடி 60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நேற்று தொடங்கி வைக்கப்பட்டன. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் எம்எல்ஏக்கள் நிவேதா முருகன், பன்னீர்செல்வம், சுற்றுலா அலுவலர் அரவிந்த் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுகவினர் அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டும்: ஓ.பி.ரவீந்திரநாத் குமார் எம்.பி. பேட்டி



சீர்காழி, ஏப். 27 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி சட்டநாதர் கோவிலில் எம்.பி. ரவீந்திரநாத் குமார் சாமி தரிசனம் செய்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் திருச்சி மாநாடு ஒன்றரை கோடி தொண்டர்கள் என்ன நினைக்கிறார்களோ அந்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார்.

அதிமுக பொதுச் செயலாளர் பிரச்சனை நீதிமன்றத்தில் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இதே பொதுக்குழு தான் ஒருங்கிணைப்பாளரையும் தேர்ந்தெடுத்தது. அதிமுகவிலிருந்து யார் யாரெல்லாம் வெளியே சென்றார்களோ அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து கட்சியை பலப்படுத்த வேண்டும்.

இரட்டை இலை சின்னத்தில் நின்று வெற்றி பெற்ற ஒரே எம்.பி. நான். அதிமுக கொடி, சின்னத்தை நான் பயன்படுத்தக்கூடாது என்றால் ஒன்றை கோடி தொண்டர்களும் பயன்படுத்தக்கூடாது என்று அர்த்தம். அதிமுக உட்கட்சி விவகாரத்தில் மத்திய அரசு தலையிட வில்லை. சீர்காழி சட்டநாதர் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட ஐம்பொன் சிலைகள் அனைத்தும் தருமை ஆதினத்தின் பாதுகாப்பில் இருக்க அரசு நடவடிக்கை வேண்டும் என தெரிவித்தார்.

தூத்துக்குடி விஏஓ கொலை குற்றவாளிகளை கண்டுபிடித்து

# 30 நாட்களுக்குள் தூக்கு தண்டனை விதிக்க வேண்டும்

தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் விக்கிரம ராஜா



சென்னை, ஏப். 27 –

சென்னை, வண்ணாரப்பேட்டை, சோலையப்பன் தெருவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் வடசென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் ஆதி குருசாமி கடை திறப்பு விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு வணிக சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் விக்கிரம ராஜா கலந்து கொண்டு கடையை திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மே5வணிகர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு வணிகர் பேரமைப்பு சார்பில் ஈரோட்டில் பல லட்சம் வணிகர்கள் கலந்து கொள்ளும் மாநாடு நடைபெறுகிறது. இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட வணிகர்கள் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் கொடூரமாக கொலை செய்தது வன்மையாக கண்டிக்கத்தக்கது. அரசு அலுவலர்கள் தாக்கப்படுவதை காவல்துறை இரும்பு கரம் கொண்டு அடக்க வேண்டும். வழக்கை இழுத்துக் கொண்டு செல்லாமல் 30 நாட்களுக்குள் தூக்கு மேடைக்கு அனுப்ப வேண்டும் என்பதை தமிழ்நாடு வணிக சங்க பேரமைப்பு வலியுறுத்துகிறது. அந்த நிலை ஏற்பட்டால் மட்டும்தான் அரசு ஊழியர்கள் பாதுகாப்பாக இருக்க முடியும். லஞ்சம் வாங்காத அதிகாரிகள் தலைநிமிர்ந்து நடக்க முடியும் என்றார்.

நிகழ்ச்சியில் மாநில தலைமைச் செயலாளர் ஆர்.ராஜ்குமார், மாநில பொருளாளர் சதக்கத்துல்லா, துணைத்தலைவர் காசிராஜன், இணைச் செயலாளர் சந்திரசேகரன், வடசென்னை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் காமராஜ், செயலாளர் கதிர்வேலு உட்பட பலர் கலந்து கொண்டனர்

# 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த சுப்ரமணிய சுவாமி கோவில் குடமுழுக்கு விழா





**மயிலாடுதுறை, ஏப். 27 –**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, பெரம்பூர் கிராமத்தில் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த சோழர் காலத்தில் கட்டப்பட்ட இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான சுப்ரமணிய சுவாமி கோவில் அமைந்துள்ளது.

இந்த தலத்தில் எழுந்தருளியுள்ள வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமியை தக்ஷன்னுடைய யாகத்தில் சாபம் அடைந்த பிரம்மதேவன் வழிபாடு செய்து சாப விமோசனம் பெற்றதுடன், சூரபத்மன் மயில் உருவம் பெற்றபின் ஆறு திருமுகங்களைக் கொண்ட இம்முருக பெருமானை வணங்கி ஞான உபதேசம் பெற்று மயில் வாகனமாக இருக்கின்ற ஸ்தலமாக இது விளங்கி வருகிறது.

இங்கு தக்ஷிணாமூர்த்தி தக்ஷண கோஷ்டத்தில் மயில் வாகனத்தில் அமர்ந்து ஞான குகனாக அருள் பாலிக்கிறார். இதுவேறுஎங்கும்இல்லாததனி சிறப்பாகும். ஆறுமுகங்கள், 12 கரங்களுடன், கடம்ப மாலை, மதங்க அணிகலன்களுடன் முருக பெருமான் காட்சியளிக்கும் புண்ணிய தலமான இந்த கோவிலின் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு குடமுழுக்கு விழா கடந்த 23 -ஆம் தேதி யாகசாலை பூஜைகளுடன் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து யாகசாலை பூஜைகள், பூர்ணாஹுதி நடைபெற்று, விழாவின் முக்கிய நாளான இன்று ஆறாம் கால யாகசாலை பூஜைகள் முடிவடைந்தது. தொடர்ந்து பூரணாஹுதி, மகா தீபாராதனை நடைபெற்றது.

யாகசாலையில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க கடங்கள் புறப்பட்டு கோவிலை வலம் வந்து விமானத்தை அடைந்தது. தொடர்ந்து 9.30 மணியளவில் சிவாச்சாரியார்கள் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி, ஆனந்தவல்லி அம்பாள், சமேத பிரம்மபுரீஸ்வரர், மற்றும் பரிவார மூர்த்திகள், விமான கலசங்களில் புனித நீர் ஊற்றி குடமுழுக்கு விழா நடைபெற்றது. பின்னர் மகா தீபாரதனை காண்பிக்கப்பட்டது.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு முருகனுக்கு அரோகரா என்று பக்தி பரவசத்துடன் கோஷங்களை எழுப்பி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் முருகேசன், ஆய்வாளர் கண்ணதாசன் மற்றும் குலதெய்வக்காரர்கள், கிராமவாசிகள், கோவில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர். கும்பாபிஷேக நிகழ்ச்சி பாதுகாப்புடனும் அசம்பாவிதங்கள் ஏற்படாத வகையில்மயிலாடுதுறைமாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவுறுத்தலின்பேரில்பெரம்பூர் காவல்துறையினர் மற்றும் திருக்கடையூர் தீயணைப்புத் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# திருப்புரசுந்தரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரியில் பள்ளிகள் அளவிலான கிரிக்கெட் போட்டி நடைபெற்றது



**செங்கல்பட்டு, ஏப். 27 –**

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றத்தில் இயங்கி வரும் அருள்மிகு திருப்புரசுந்தரி அம்மன் தொழில்நுட்ப கல்லூரியில் பள்ளிகள் அளவிலான கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் மதியழகன் தலைமையில், கல்லூரியின் விரிவுரையாளர்கள் மதன்குமார் மற்றும் பார்த்திபன் ஆகியோர் இணைந்து நடத்தினர்.

இதில் வெங்கப்பாக்கம் அரசினர் மேல்நிலை பள்ளி, மானாமதி அரசினர் மேல்நிலை பள்ளி, நெற்குணப்பட்டு செயிண்ட் தாமஸ் மவுண்ட் மேல்நிலைபள்ளி, பவுஞ்சூர் செயிண்ட் ஜோசப் மேல்நிலை பள்ளி மற்றும் திருக்கழுகுன்றத்தை சார்ந்த அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளி, பு.தி.வ.ச உயர்நிலை பள்ளி, வி.எஸ் மெட்ரிக் மேல்நிலை பள்ளி, அருணா மெட்ரிக் மேல்நிலை பள்ளி உள்ளிட்ட 8 அணிகள் கலந்து கொண்டன.

அதில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி போட்டியில் வெங்கப்பாக்கம் அரசினர் மேல்நிலை பள்ளி முதல் இடத்தையும், வி.எஸ் மெட்ரிக் அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தது. கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றி கோப்பைகளை கல்லூரி முதல்வர் சாய்கிருஷ்ணன் வழங்கினார்.

பரிசளிப்பு விழாவில் கல்லூரியின் துணை முதல்வர் சத்யபாமா, முதலாம் ஆண்டு துறை தலைவர் சரவணன், இயந்திரவியல் துறை தலைவர் ருத்ரகோட்டி, மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை தலைவர் ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிறுமியை பலாத்காரம் செய்ய முயன்றதால் மோதல்: ஏழு பேர் சிறையில் அடைப்பு, ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிப்பு



திருவள்ளூர், ஏப். 27 –

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பனப்பாக்கம் கிராமத்தில் ஆனந்தா சேம்பர்ஸ் என்ற செங்கல் தொழிற்சாலையை சென்னை அண்ணா நகரை சேர்ந்த மனோகர் என்பவர் நடத்தி வருகிறார்.

இதில் திருவண்ணாமலை மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தங்கி இருந்து பணியாற்றி வருகின்றனர். இங்கு பணியாற்றி வரும் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தாலுகா, குளிச்சலை கிராமத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி செங்கல் தொழிற்சாலைக்கு எதிரே உள்ள ஒரு மறைவான இடத்தில் சிறுநீர் கழிக்க சென்றார். அப்போது இதே செங்கல் தொழிற்சாலையில் தங்கி இருந்து பணியாற்றி வரும் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுகா, கிழக்கு மருதூர் கிராமம், மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த ஜான் பீட்டர் என்பவரது மகன் பிரவீன் ராஜ் (வயது 25) என்பவர் சிறுமியை பின்தொடர்ந்து சென்று பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார்.

இதனால் சிறுமி அழுது கொண்டே செங்கல் தொழிற்சாலைக்கு வந்து தனது தந்தை வெங்கடேசன் மற்றும் உறவினர்களிடம் நடந்தவற்றை கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சிறுமியின் தந்தை வெங்கடேசன் மற்றும் அவரது உறவினர்கள் பிரவீன் ராஜை தட்டி கேட்டனர். ஆனால், பிரவீன்ராஜ் நான் அப்படி தான் செய்வேன் என்று தரக்குறைவான வார்த்தைகளால் வெங்கடேசனை திட்டியதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த வெங்கடேசன் மற்றும் அவர்களது உறவினர்கள் செங்கல் தொழிற்சாலையில் உள்ள மின் கம்பத்தில் பிரவீன் ராஜை கட்டி வைத்து தாக்கியதாக கூறப்படுகிறது.

இதனால் வெங்கடேசன் தரப்பினருக்கும், பிரவீன் ராஜ் உறவினர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் உருட்டு கட்டைகளாலும், கம்பிகளாலும் தாக்கிக் கொண்டனர். தகவல் அறிந்த ஆரணி காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று இரண்டு தரப்பைச் சேர்ந்த ஏழு பேரை பிடித்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக வெங்கடேசன் மற்றும் ஜான் பீட்டர் என இருவரும் தனித்தனியாக புகார் அளித்தனர். எனவே, போலீசார் இரண்டு தரப்பினர் கொடுத்த புகார் மனுக்களை பெற்றுக் கொண்டு மொத்தம் எட்டு பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். பின்னர், பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ரேட் முன்னிலையில் அவர்களை ஆஜர் செய்தனர்.

மாஜிஸ்ட்ரேட் உத்தரவின் பேரில் படுகாயம் அடைந்த வெங்கடேசனை சென்னை ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் கொண்டு சென்று அனுமதித்தனர். மருதூர் கிராமத்தைச் சேர்ந்தவர்களான கிருஷ்ணன் (வயது 25), மணிராஜ் (வயது 25), பிரவீன் ராஜ் (வயது 25), ஜான் பீட்டர் (வயது 52), விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான சதீஷ் (வயது 37), மூர்த்தி (வயது 25), குமார் (வயது 35) ஆகிய ஆறு பேரையும் புழல் சிறையிலும், பிரவீன் ராஜை திருவள்ளூர் கிளை சிறையிலும் அடைத்தனர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறையை குறைத்தல், தடுத்தல், தீர்வு காணுதல்: காரைக்காலில் அதிகாரிகளுடன் கலந்தாய்வு



**காரைக்கால், ஏப். 27 –**

காரைக்கால் மாவட்ட மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை காரைக்கால் மற்றும் மைத்ரி தேசிய பெண்கள் கூட்டமைப்பு, புதுச்சேரி பெண்கள் கல்வி சமூக அறக்கட்டளை ஆகியவை ஒருங்கிணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறையை குறைத்தல் – தடுத்தல் – தீர்வு காணுதல் சம்பந்தமாக பல்வேறு துறை அதிகாரிகளுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஜான்சன் தலைமை வகித்தார். காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்ரமணியன் மற்றும் லலிதாம்பாள் நிர்வாக அலுவலர், புதுவை துணை இயக்குநர் சத்யா, முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் உள்ளிட்ட துறை அதிகாரிகள், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை, மருத்துவதுறை, காவல்துறை, கல்வித்துறை, போன்ற முக்கிய துறை அதிகாரிகள், வழக்கறிஞர்கள், தன்னார்வலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இந்த கலந்தாய்வு கூட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாலியல் வன்முறையை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும் காரைக்காலில் இதுபோன்ற வன்முறைகளை அறவே தடுப்பது சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்பட்டது.

பெண்கள் கல்வி சமூக அறக்கட்டளையை சேர்ந்த பத்மினி தலைமையிலான தன்னார்வ அமைப்புடன் காரைக்காலில் இந்நிகழ்வு நடத்தப்படுகிறது. இந்நிகழ்வில் பேசிய துணை மாவட்ட ஆட்சியர், வன்முறையை தடுப்பது சம்பந்தமாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வது சம்பந்தமாகவும், பெற்றோர்கள் பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும், பாலின வன்முறை சம்பந்தப்பட்ட விழிப்புணர்வு பொதுமக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் ஏற்படுத்த வேண்டும், காரைக்காலில் இது போன்ற பாதிப்பு இல்லை, பாதிப்பு இல்லாமல் காரைக்கால் மாவட்டம் கண்காணிக்கப்படும் என்றும் கூறினார்.

மேலும் பெண் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை அளிக்க வேண்டும், செல்போன் பார்ப்பதை தவிர்க்க வேண்டும், நல்ல கல்வி புகுத்த வேண்டும், தன்னார்வலர் அமைப்புகள் பள்ளிக்குச் சென்று மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறினார். நீங்கள் இங்கு எடுக்கும் முடிவு எதிர்கால சமுதாயம் சிறந்து விளங்க பயன்படும். இந்த கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் கூறினார்.

இந்நிகழ்வில் பேசிய காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன் பெண்களுக்கு எதிரான செயல்கள் காரைக்காலில் கண்காணிக்கப்படுவதாகவும், பள்ளிகளிலும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி மதன்குமார் கூறுகையில், மதுவினாலும், தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களாலும் இளைஞர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள் அதை தடுப்பது சம்பந்தமாக இக்குழு ஆலோசனை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மேலும் காரைக்கால், சமூக அறக்கட்டளை நிர்வாகி பத்மினி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுதா செய்திருந்தார்.

# பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு.சின்னப்பா முதலாம் ஆண்டு நினைவு பல்கலைத் திறன் போட்டிகள் நேற்று துவங்கின





புதுக்கோட்டை , ஏப். 27 -
புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிறுவனர் அறமனச்செம்மல் சீனு. சின்னப்பா அவர்களுடைய முதலாம் ஆண்டு நினைவு தினத்தை அனுசரிக்கும் விதமாக பல்கலைத் திறன் போட்டிகள், யோகாசனப் போட்டி, இரத்ததான முகாம், சிலம்பம், கராத்தே போட்டிகள், கவியரங்கம், பரிசளிப்பு விழா என ஐந்து நாள் நிகழ்வின் துவக்க விழா சின்னப்பா நகரில் உள்ள மஹராஜ் மஹாலில் நேற்று நடைபெற்றது.

விழாவினை திருக்குறள் கழகத்தின் தலைவர் க.இராமையா துவங்கி வைத்தார், மாவட்ட வர்த்தக கழகத்தின் தலைவர் சாகுல்ஹமீது, செயலாளர் சாந்தம் சவரிமுத்து, பொருளாளர் கதிரேசன், கிங் டவுன் ரோட்டரி சங்க தலைவர் விக்னேஷ், செயலாளர் ஆனந்த் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் தொல்பொருள் ஆய்வு கழகத்தின் நிறுவனர் ஆ.மணிகண்டன், சத்தியராம் இராமுக் கண்ணு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புவனேஸ்வரி பாண்டியன் வரவேற்புரையாற்றினார்.

அபாகஸ், தமிழ், ஆங்கிலம் கையெழுத்துப் போட்டி, ஓவியம் என பல்கலைத்திறன் போட்டிகள் நடைபெற்றது 750க்கும் மேற்பட்ட பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் பெற்றோர்களோடு கலந்துகொண்டனர்.

# தமிழக மக்களிடம் சொன்னதை நிறைவேற்றும் அரசு தான் திராவிட மாடல் அரசு அமைச்சர் மெய்யநாதன் பேச்சு



சீர்காழி, ஏப். 27 -
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகரம், ஒன்றியம், பேரூராட்சி ஆகியவற்றில் திமுக வாக்குச்சாவடி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய அமைச்சர் மெய்யநாதன், தமிழ்நாட்டில் பல அரசியல் கட்சிகள் இல்லாமல் போய்விட்டன. தமிழக பொதுமக்கள் ஆதரவு முதலமைச்சருக்கு 30 சதவீதம் செல்வாக்கு உயர்ந்து உள்ளதாகவும் கூறினார்.

கொள்ளிடம் ஆற்றுப்படுகை, நாதல் படுகை , முதலை மேடு திட்டு பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டபோது அரசியல்வாதிகள் வருவதோடு சரி. கோரிக்கை நிறைவேற்றவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டினர். சொல்லிவிட்டு செல்வது அதிமுக, செய்து காட்டுவது திமுக திராவிட மாடல் ஆட்சி என 16 கோடி ரூபாயில் இரண்டு புயல் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்படும் என முதலமைச்சர் சட்டசபையில் அறிவித்துள்ளார்.

மேலும் மக்களுக்கான வளர்ச்சி பணிகள், திட்டங்களை 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் மக்களுக்காக உழைக்கும் முதலமைச்சர் என கூறினார். கலைஞர் பிறந்த நாள் ஜூன் 3 ஆம் தேதி திருவாரூர் காட்டூரில் நூற்றாண்டு விழா கலைஞரின் நினைவிடம் அமைக்கப்பட்டு, அந்த நிகழ்ச்சியில் தேசியத் தலைவர்கள் பங்கு கொள்கின்றனர் என பேசினார்.

# மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தெற்கு வட்டக்கிளை சார்பாக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்




மதுரை ,ஏப்.27-
மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தெற்கு வட்டக்கிளை சார்பாக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் பல கோரிக்கைகளை முன்வைத்தனர், அதில் பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்துதல், சரண்டர் அகவிலைப்படி உடனே அறிவித்தல், சத்துணவு அங்கன்வாடி எம்.ஆர். பி செவிலியர்கள் ஊர்புற நூலகர்கள் கால முறை ஊதியம் வழங்க வேண்டும், அனைத்து துறைகளிலும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் நகராட்சி ,மாநகராட்சிகளில் -152, 10 என்ற அரசாணை நிருத்தி வைக்க வேண்டும் ,கடைநிலை ஊழியர்களுக்கு நிரந்தர பணி வழங்க வேண்டும் உள்ளிட்ட அனைத்துகோரிக்கைகளையும் நிறைவேற்ற வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக ஆயிரம் இடங்களில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

அதில் ஒரு பகுதியாக திருப்பரங்குன்றம் தெற்கு வட்டக்கிளை சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்,மாவட்ட இனச் செயலாளர் ஆ.அமுதா, நகர சுகாதார செவிலியர் சங்கம் ம.பஞ்சவர்ணம், பொறியியல் பிரிவு பணியாளர் சங்கம் சார்பாக சி எம். மகுடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அங்கன்வாடி ஊழியர்களின் கோரிக்கைகள்

# ஏற்கப்பட்டு காத்திருக்கும் போராட்டம் வாபஸ் : எம்எல்ஏ சின்னதுரை வாழ்த்து



புதுக்கோட்டை, ஏப்.27-
அங்கன்வாடி ஊழியர்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற காத்திருக்கும் போராட்டம் திரும்பப்பெறப்பட்டது. அங்கன்வாடி ஊழியர்கள் காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், பள்ளி கல்லூரிகளுக்கு அளிக்கப்படுவதைப் போல அங்கன்வாடி மையங்களுக்கும் கோடை விடுமுறை அளிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காத்திருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிஐடியு தலைமையிலான தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 46 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர், புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,300-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர், செவ்வாய்க்கிழமை மாலையில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற காத்திருக்கும் போராட்டத்தில் இரவு முழுவதும் பங்கேற்று, நேற்று காலையிலிருந்தும் போராட்டம் தொடர்ந்தது. போராட்டத்தின் வீரியத்தை உணர்ந்த அரசு சங்கத்தின் மாநில நிர்வாகிகளுடன் பேச்சுவார்தை நடத்தியது. இதனைத் தொடர்ந்து கோடை விடுமுறை அளிக்கவும், காலிப்பணியிடங்களை நிரப்பவும் சமூகநலத்துறை அமைச்சர் கீதாஜீவன் ஒப்புதல் அளித்துள்ளார். இதனைத் தொடர்ந்து நேற்று மதியத்திலிருந்து போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களிடம் கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.சின்னத்துரை வாழ்த்துத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது, உங்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் காரணமாக உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு ஒப்புதல் அளித்துள்ளது, இதை ஆணையாக அரசு விரைவில் வெளியிட வேண்டும் என்றார்.

போராட்டத்தில் சிஐடியு மாவட்டச் செயலாளர் ஏ.ஸ்ரீதர், தலைவர் கே.முகமதலிஜின்னா, சங்கத்தின் மாவட்டத் தலைவர் எம்.விஜயலெட்சுமி, செயலாளர் ஏ.சி.செல்வி, பொருளாளர் எஸ். சவரியம்மாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திருமயம் லெனின் நகர் பொதுமக்கள் பல ஆண்டு கால கோரிக்கை நிறைவேற்றம்



திருமயம்,ஏப்.27-
புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் லெனின் நகர் பொதுமக்கள் பல ஆண்டுகளாக சாலையை சீர் செய்வதற்கு போராடியதின் விளைவாக அந்தச் சாலையை பிலவர் பிளாக் சாலையாக 2022-2023 ஒன்றிய பொது நிதியின் கீழ் 3.72லட்சம் மதிப்பீட்டில் சாலை சீரமைக்கப்பட்டு ஒன்றிய குழு உறுப்பினர் சரண்யா சரவணன் ரிப்பன் வெட்டி சாலையை திறந்து வைத்தார். ஊராட்சி மன்றத் தலைவர் க.சிக்கந்தர், முன்னாள் திமுக ஒன்றிய செயலாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் எம் .பி. சரவணன், கம்யூனிஸ்ட் ஜீவா, பி டி ஓ சங்கர், ஒப்பந்தகாரர் பிரான்சிஸ் சேவியர் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ,பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றனர்.

# புதுக்கோட்டையில் மாவட்ட மருத்துவ சமுதாய பேரவை நிர்வாக குழுக் கூட்டம்



புதுக்கோட்டை,ஏப்.27-
புதுக்கோட்டையில் தமிழ்நாடு மருத்துவர் சமுதாய பேரவையின் மாவட்ட நிர்வாக குழு கூட்டம் ஜீவா மாடியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது, கூட்டத்திற்கு மாநில துணைத்தலைவர் சிங்காரம் தலைமை ஏற்று நடத்தினார்.

புதுகை மாவட்ட செயலாளர் ஜீவா முன்னாள் மாவட்டத் தலைவர் கருப்பையா, உத்தமராஜ் முன்னிலையில் நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது, கூட்டத்தில் மாவட்ட மருத்துவச் சமுதாய பேரவையின் தலைவர் கே .மகாலிங்கம் அனைவரையும் வரவேற்று பேசினார்.

சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு மருத்துவ சமுதாய பேரவையினுடைய மாநிலத் தலைவர் வெங்கட் பழனி, தொழிலாளர் நல வாரியம் பற்றியும் சங்கங்களின் விதிமுறைகளைப் பற்றியும் விளக்கமாக எடுத்துப் போகிறார்,மருத்துவ சமுதாய பேரவையின் வடசென்னை மாவட்டத்தினுடைய தலைவர் கவிஞர் வாணியம்பாடி தியாகராஜன், மருத்துவனை எழுந்து வா என ஒரு பாடலை பாடி விளக்க உரையாற்றினார், மேலும் இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட மருத்துவ சமுதாய பேரவையின் கௌரவ தலைவராக கருப்பையா ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டது, இதனைத் தொடர்ந்து புதுகை மாவட்ட மருத்துவ சமுதாய பேரவையின் அமைப்பாளராக உத்தம ராஜ் ஏக மனதாக தேர்வு செய்யப்பட்டது, மேலும் இந்நிகழ்ச்சியில் கிளை நிர்வாகிகள் கருப்பையா என்ற முகேஷ், சொக்கலிங்கம், சக்திவேல் ,செல்வராஜ், சந்திரபிரசாத்

மற்றும் ஏனைய மருத்துவ சமுதாய பேரவை உறுப்பினர்கள் சிறப்பாக கலந்து கொண்டனர் கூட்டம் முடிவில் ஜீவா நன்றி கூறினார்.

# கந்தர்வகோட்டை அரசுப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் அறிவுசார் சொத்துரிமை தினம் கடைப்பிடிப்பு

கந்தர்வக்கோட்டை ,ஏப் .27-
புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் கொத்தகப்பட்டி நடுநிலைப் பள்ளியில் அறிவுசார் சொத்துரிமை தினம் கடைபிடிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் ராஜேந்திரன் தலைமை வகித்தார், ஆங்கில பட்டதாரி ஆசிரியர் கலைமணி அனைவரையும் வரவேற்றார், இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் வட்டாரத் தலைவர் ரகமதுல்லா கலந்து கொண்டு அறிவுசார் சொத்துரிமை தினம் குறித்து பேசியதாவது,

உலக அறிவுசார் சொத்துரிமை தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் 26 ல் கொண்டாடப்படுகிறது. புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிப்பதில் அறிவுசார் சொத்துரிமைகளின் பங்கு பற்றிதெரிவிக்கஇந்ததினத்தை கொண்டாடுகிறோம். உலக அறிவுசார் சொத்துரிமை தினம் 2023, 'பெண்கள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை புதுமை மற்றும் படைப்பாற்றலை துரிதப்படுத்துதல்' என்ற கருப்பொருளில் கடைப்பிடிக்கப்படுகிறது.

இது உலகெங்கிலும் உள்ள பெண் கண்டுபிடிப் பாளர்கள், படைப்பாளிகள் மற்றும்தொழில்முனைவோரின் மனப்பான்மை மற்றும் அவர்களின் அற்புதமான வேலைகளைக் கொண்டாடுகிறதுஎன்று பேசினார்.

துளிர் திறனறிவுத் தேர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழும் துளிர் மாத இதழும் வழங்கப்பட்டது, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் வெளியிடும் அறிவியல் வெளியீடுகளை வாசிக்க வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது, நிறைவாக பட்டதாரி ஆசிரியை சுகன்யா நன்றி கூறினார்.

### 2024 மக்களவைத் தேர்தலில் பாஜவுக்கு எதிரான அணியில்

# தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான அணி முன்னணி பாத்திரம் வகிக்கும்: கே.பாலகிருஷ்ணன்




புதுக்கோட்டை, ஏப்.27-
நடைபெற உள்ள 2024 மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு எதிரான அகில இந்திய அணியில் தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான அணி முன்னணி பாத்திரம் வகிக்கும் என்றார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும், இரு முறை புதுக்கோட்டை மக்களவைத் தொகுதியின் உறுப்பினர், இரு முறை நாகை சட்டபேரவைத் தொகுதி உறுப்பினராகவும் இருந்த ஆர்.உமாநாத் நூற்றாண்டு விழா கருத்தரங்கு புதுக்கோட்டை நகர்மன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தோழர் ஆர்.உமாத் குறித்த நூற்றாண்டு மலரை வெளியிட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் கே.பாலகிருஷ்ணன் பேசியதாவது,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான தலைவர்கள் சங்கரய்யா, நல்லசிவன், உமாநாத் போன்றோரின் நூற்றாண்டு விழாவை இப்போது கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த நூற்றாண்டுகள் வெறுமனே தலைவர்களைப் புகழ்ந்து பேசுவது மட்டும் நோக்கமல்ல, தலைவர்களின் வாழ்க்கை முறையை மறுவாசிப்பு செய்யும் முறைதான் இதுபோன்ற விழாக்கள் எதிர்காலத்தில் நமது இயக்கப் பணிகளில் இடர்பாடுகளை சந்திக்கும்போது, உமாநாத் போன்றோரின் போராட்ட வாழ்க்கை அவற்றை எதிர்கொள் உதவிசெய்யும்.

ஒன்பதரை ஆண்டுகள் சிறை வாழ்க்கையும், ஏழு ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கையும் வாழ்ந்தவர் உமாநாத். சிறையில் இருந்து உயிரைப் பணயம் வைத்து தப்பி வந்து மக்களுக்காக பணியாற்றியவர் உமாநாத். கம்யூனிஸ்ட்டுகள் இன்னல்கள் பலவற்றை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டு லட்சியத்துக்காக தியாகங்களைச் செய்யக்கூடியவர்கள், இட ஒதுக்கீட்டை ரத்து செய்து விடுங்கள் என்று சொல்லுகிற ஆர்.எஸ்.எஸ் இந்த நாட்டில் இருக்கலாம். எம்மதமும் சம்மதம் சொல்லுகிற இஸ்லாமியர்கள் இருக்கக்கூடாது என்கிற கோட்பாட்டை நிலைநிறுத்தப் பார்க்கின்றனர், பாராளுமன்ற மாண்புகளையோ சிதைத்து வருகின்றனர்.

2024-ல் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் மோடி ஆட்சியை வீட்டுக்கு அனுப்புகிற பணியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செய்யும். 2024 தேர்தலில் பாஜவுக்கு எதிராக இந்திய அளவில் ஒரு மாபெரும் அணி உருவாக்கப்படும். அந்த பின்புலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான அணி தமிழ்நாட்டில் செயல்படும் என்றார்.

# ரூ.44 லட்சத்துடன் வங்கி கேஷியர் மாயம் கடத்தப்பட்டதாக வெளியான வாட்ஸ்-அப் ஆடியோவால் பரபரப்பு

விழுப்புரம் , ஏப். 27 -
விழுப்புரம் அருகே சிந்தாமணி கிராமத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் கிளை இயங்கி வருகிறது. இங்கு கேஷியராக பணியாற்றி வருபவர், செவ்வாய்கிழமை காலை வழக்கம்போல் பணிக்கு வந்தார். அப்போது கேஷியர் அறைக்கு சென்ற அவர், அங்குள்ள பெட்டியில் கட்டுக்கட்டுகளாக இருந்த ரூபாய் நோட்டுகளை எடுத்து, தான் கொண்டு வந்திருந்த ஒரு பையினுள் போட்டார். பின்னர் காலை 10.45 மணியளவில் அங்கிருந்த அதிகாரிகளிடம் தனக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அருகில் உள்ள முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று விட்டு வருவதாக கூறி அந்தபையுடன் வங்கியில் இருந்து வெளியே சென்றார். ஆனால் வெகு நேரமாகியும் அவர், வங்கிக்கு வரவில்லை. அவரது அறையில் வேறொருவர், கேஷியர் பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது வங்கியின் சேமிப்பு கணக்கு விவரத்தை அங்கிருந்த கணினி மூலம் சரிபார்த்தபோது ரூ.43 லட்சத்து 89 ஆயிரம் இருப்பு இருந்ததும், ஆனால் அந்த பணம், வங்கியில் இல்லாததும் கண்டுபிடிக்கப்பட்டது. உடனே வங்கி அதிகாரிகள், கேஷியரை செல்போனில் தொடர்பு கொண்டபோது அவரது செல்போன் சுவிட்ச்ஆப் செய்யப்பட்டிருந்தது. நீண்டநேரமாகியும் அவரை தொடர்புகொள்ள முடியவில்லை. இதனால் அவரது குடும்பத்தினரை வங்கி அதிகாரிகள் தொடர்புகொண்டு விசாரித்தபோது வீட்டிற்கு வரவில்லை என்று தெரிவித்தனர்.

இதனால் அந்த பணத்துடன் கேஷியர் தலைமறைவாகி இருக்கலாம் என்று வங்கி அதிகாரிகள், ஊழியர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டது. இதுகுறித்து வங்கியின் கிளைமேலாளர், விழுப்புரம் தாலுகா போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதில், வங்கியில் இருந்த பணத்தை கேஷியர், எடுத்துச்சென்று விட்டதாகவும், அவரை கண்டுபிடித்து பணத்தை மீட்டுத்தருமாறும் கூறியிருந்தார். அதன்பேரில், இன்ஸ்பெக்டர் ஆனந்தன் தலைமையிலான போலீசார் விசாரணை மேற்கொண்டனர். தொடர்ந்து, சைபர்கிரைம் போலீசாரின் உதவியுடன் போலீசார் விசாரித்தபோது, அந்த கேஷியரின் செல்போன், கடைசியாக சென்னை அருகே திருவான்மியூர் பகுதியில் சுவிட்ச் ஆப்செய்யப்பட்டிருப்பது தெரிந்தது. மேலும் விசாரணையில் அவர், தனது உறவினர் ஒருவருக்கு ரூ.1½ லட்சத்தை அனுப்பியுள்ளதோடு, வாட்ஸ் - அப் மூலம் ஆடியோவாக பேசியும் அனுப்பியுள்ளார். அதனை போலீசார் கைப்பற்றி விசாரித்தனர். அதில், அந்த காசாளர் கூறியிருப்பதாவது:-

நான் இப்போது எங்கு இருக்கிறேன் என எனக்கு தெரியவில்லை. ஒரு கும்பல் என்னை மிரட்டி பணம் எடுத்து வரும்படி சொன்னார்கள். நானும் அவர்களுக்கு பயந்து பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டேன். என்னிடம் அவர்கள் ரொம்ப நாட்களாக பணம்கேட்டு டார்ச்சர் செய்தார்கள். எனக்கு வேறு வழி தெரியவில்லை என்பதால் வங்கியில் இருந்து பணத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

நான் கூட்டேரிப்பட்டில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அங்கிருந்து பஸ் ஏறினேன். அவர்கள், என்னை அழைத்துக்கொண்டு எங்கேயோ சென்றார்கள். நான் தற்போது எங்கு இருக்கிறேன் என்று தெரியவில்லை. அந்த கும்பல், வங்கி கேஷியரை பார்த்து டார்க்கெட் செய்கிறார்கள். ஆகவே பத்திரமாக இருங்கள், எனது உடல் கிடைக்குமோ, கிடைக்காதோ என தெரியவில்லை என்று கண்ணீர்மல்க பேசியுள்ளார். வங்கி கேஷியர் கடத்தப்பட்டதாக கூறப்பட்டாலும் அவரது அக்காவுக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் அனுப்பி உள்ளார். எனவே அவர் கடத்தல் நாடகம் ஆடுவதாக சைபர் கிரைம் போலீசார் சந்தேகிக்கிறார்கள்.

அவரது செல்போன் சென்னை திருவான்மியூரில் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருப்பதால் அவர் சென்னையில் பதுங்கி இருக்கலாம் என போலீசாருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. எனவே அவரை பிடிக்க தனிப்படை போலீசார் சென்னை விரைந்துள்ளனர். மேலும் காஞ்சிபுரம், வேலூர், புதுவை ஆகிய இடங்களுக்கும் போலீசார் விரைந்து சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். ரூ.44 லட்சத்துடன் வங்கி கேஷியர் மாயமான சம்பவம் விழுப்புரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

### கோடை மழையை பயனுள்ளதாக பயன்படுத்த

# வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர்கள் யோசனை

ஆலங்குடி , ஏப். 27 –

தற்போது பெய்து வரும் கோடை மழையை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் வல்லுநர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கடந்த இரண்டு நாட்களாக புதுக்கோட்டை மாவட்டத்தை சுற்றியுள்ள பகுதிகள் பரவலாக லேசான முதல் மிதமான மழை பெய்துள்ளது மண்ணில் இருக்கும் ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்யவும் . உழவின் போது ஏற்படும் பள்ளம் நீரைப் பிடித்து வைப்பதால் நீர் ஊடுருவுதல் அதிகரிக்கும் . சரிவுக்கு குறுக்காக அமைத்து உழவு சால்கள் நீர் வழிந்தோடுவதைத் தடுத்து அதன் திசை வேகத்தை குறைத்து தேக்கும் திறனை அதிகரிக்கிறது . மேலும் விதைப்பிற்கு முன் பெறப்படும் மழையை சேமிக்கலாம். அடுத்த சில தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் பகல் நேரங்களில் வெப்பச்சலனம் அதிகமாகியுள்ளதால், பூச்சி இனங்களின் இனப் பெருக்கத்திற்கு உகந்தாக இருக்கும் . இதனால் கால்நடை மற்றும் கோழி வளர்க்கும் விவசாயிகள் மாட்டுதொழுவம், கோழி வளர்க்கும் பகுதியில் கிருமி நாசினி தெளித்து சுத்தமாக வைத்துக் கொள்ளவும். மழை பெறப்பட்ட பகுதிகளில் தக்கைபூண்டு,சணப்பை , கொழிஞ்சி போன்றவற்றை தெளிக்கவும்.

விவசாயிகள் தற்போது பெய்துள்ள கோடை மழையை பயன்படுத்தி மரவள்ளி வளரும் பருவம் (4 –5 மாத வயது ) பயிருக்கு மேலுரம் மற்றும் நன்கு மக்கிய தொழு உரம் இட்டு மண் அணைக்கவும். மானாவாரியில் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் எதிர்பார்க்கும் கோடை மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்வதன் மூலம் மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

பொதுவாக கோடைகாலங்களில் அதிகபட்ச வெப்பநிலை உயர்ந்துகாணப்படுவதால் தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்புள்ளது இதனை கட்டுப்படுத்த மஞ்சள் நிற பாலித்தீன் தாள்களால் ஆன ஒட்டுப் பொறிகள் (நீளம் 5 அடி X அகலம் 1.5 அடி ) ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்கையில் மரங்களின் இடையே கட்டி விடவும். என்கார்சியா ஒட்டுண்ணி குளவிகள் உள்ள தென்னை ஓலைகளை ஏக்கருக்கு 10 இலை துண்டுகள் என்ற வீதம் ,தாக்கப்பட்ட ஓலைகளின் மீது இணைத்து கட்டுப்படுத்தலாம். கிரைசோபிட் அல்லது அப்பர்டோக்கிரைசா அஸ்டர் என்ற இரைவிழுங்கி முட்டைகளை ஏக்கருக்கு 400 வீதம் தாக்கப்பட்ட ஓலைகளின்மீதுஇணைத்து கட்டுப்படுத்தலாம் . சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதலின் பின்விளைவாக ஏற்படும் கரும்பூசனத்தை கட்டுப்படுத்த 1 கிலோ மைதா மாவை 5 லிட்டர் தண்ணீரில் கொதிக்கவைத்து அதன் பின் 20 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். என்கார்சியா ஒட்டுண்ணி தென்னை ஆராய்ச்சி நிலையம் ஆழியார் நகர் மற்றும் கிரைசோபிட் அல்லது அப்பர்டோக்கிரைசா அஸ்டர் என்ற இரைவிழுங்கிகள் வேளாண் பூச்சியியல் துறை ,கோயம்புத்தூர் மற்றும் வேளாண் பூச்சியியல் துறை , வேளாண்மைக் கல்லூரி மதுரையில் கிடைக்கும்

என வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் யுவராஜா, செந்தில்குமார் (நூற்புழுவியல்) , கவிதா (உழவியல்), பூ. பாலமுரளி தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் காலநிலை ) மற்றும் வேளாண் காலநிலை கவனிப்பாளர் தினகரன் ஆகியோர் கூறியுள்ளனர்.

# விஏஓ லூர்து பிரான்சிஸ் உடல் நல்லடக்கம் தூத்துக்குடி ஆட்சியர், எம்எல்ஏ, பொதுமக்கள் இறுதி அஞ்சலி

தூத்துக்குடி , ஏப். 27 –

தூத்துக்குடி அருகே வெட்டிக் கொலை செய்யப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் உடல் இன்று சொந்த ஊரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சியர், எம்எல்ஏ, பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். இதனிடையே, இந்த வழக்கில் தேடப்பட்டு வந்த மற்றொரு நபரை தனிப்படை போலீஸார் நேற்று கைது செய்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை அருகேயுள்ள சூசைபாண்டியாபுரம் கிராமத்தை சேர்ந்தவர் லூர்து பிரான்சிஸ் (53). இவர், ஸ்ரீவைகுண்டம் வட்டம் முறப்பநாடு கோவில்பத்து கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தார். இவர் செவ்வாய்கிழமை மதியம் 12.30 மணியளவில் முறப்பநாட்டில் உள்ள தனது அலுவலகத்தில் இருந்தார். அப்போது அலுவலகத்துக்குள் புகுந்த 2 நபர்கள் லூர்து பிரான்சிஸை அரிவாளால் வெட்டி கொலை செய்தனர். இந்தச் சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கொலை தொடர்பாக முறப்பநாடு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முறப்பநாடு பகுதியில் உள்ள தாமிரபரணி ஆற்றில் கலியாவூரை சேர்ந்த ராமசுப்பு என்ற ராமசுப்பிரமணியன் மற்றும் மாரிமுத்து ஆகிய இருவரும் இருச்சக்கர வாகனம் மூலம் ஆற்று மணலை எடுத்து சட்டவிரோதமாக கடத்தியுள்ளனர். இது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் கடந்த 13-ம் தேதி முறப்பநாடு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ராமசுப்பிரமணியன் மற்றும் மாரிமுத்து ஆகிய இருவரும் அலுவலகத்துக்குள்



புகுந்து லூர்து பிரான்சிஸை வெட்டிக் கொலை செய்தது போலீஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்தது.

இந்நிலையில், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த லூர்து பிரான்சிஸ் உடல் இன்று காலை பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து அவரது உடல் சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை அருகேயுள்ள சூசைபாண்டியாபுரம் கிராமத்துக்கு கொண்டுவரப்பட்டது. தேவாலயத்தில் பிரார்த்தனைக்கு பிறகு கிராமத்தில் உள்ள கல்லறை தோட்டத்தில் லூர்து பிரான்சிஸ் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கில் மாவட்ட ஆட்சியர் கி.செந்தில் ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு லூர்து பிரான்சிஸ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். மேலும், மனைவி பொன்சிட்டாள் மற்றும் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர்.

இதேபோல் தூத்துக்குடி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும், கோவில்பட்டி சட்டப்பேரவை உறுப்பினருமான கடம்பூர் செ.ராஜு, தெற்கு மாவட்ட அதிமுக செயலாளர் எஸ்.பி.சண்முகநாதன், பாஜக மாநில துணைத் தலைவர் சசிகலா புஷ்பா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள், கிராம நிர்வாக அலுவலர் சங்க நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், கிராம மக்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இதனிடையே, இந்தச் சம்பவத்தில் முக்கிய குற்றவாளியான ராமசுப்பு என்ற ராமசுப்பிரமணியனை வல்லநாடு அருகே வைத்து போலீஸார் நேற்று முந்தினம் கைது செய்தனர். மற்றொரு நபரான கலியாவூரை சேர்ந்த முருகன் மகன் மாரிமுத்து (35) என்பரை பிடிக்க 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிரமாக தேடி வந்தனர். இந்நிலையில் திருநெல்வேலி மாவட்டம் தாழையூத்து அருகே வைத்து மாரிமுத்துவை தனிப்படை போலீஸார் நேற்று காலை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ராமசுப்பிரமணியன் மற்றும் மாரிமுத்து ஆகிய இருவர் மீதும் முறப்பநாடு உள்ளிட்ட பல்வேறு காவல் நிலையங்களில் மணல் கடத்தல் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருப்பதாக போலீஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக போலீஸார் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து முறப்பநாடு, கலியாவூர், வல்லநாடு பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



சேலம் கலெக்டர் அலுவலகத்தில் சாலை பாதுகாப்பு குறித்த மாதாந்திர ஆய்வு கூட்டம் மாவட்ட கலெக்டர் கார்மேகம் தலைமையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா, மாநகர காவல் துணை ஆணையர் லாவண்யா, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஜெகநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், கீழபெருங்காவூர் கிராமத்தில் நடைபெற்ற சிறப்பு மனுநீதி நாள் முகாம் நிறைவு விழாவில் அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு பல்வேறு துறைகளின் சார்பில் 356 பயனாளிகளுக்கு 1 கோடியே 43 ஆயிரம் மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதீப் குமார் வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்வில், இலால்குடி சட்டமன்ற உறுப்பினர் அ.சௌந்தரபாண்டியன் , இலால்குடி வருவாய் கோட்டாட்சியர் வைத்தியநாதன், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் செல்வம். இலால்குடி நகாமன்ற தலைவர் துரைமாணிக்கம். இலால்குடி ஒன்றியக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், இலால்குடி வருவாய் வட்டாட்சியர் விக்னேஷ். கீழபெருங்காவூர் ஊராட்சி மன்றத்தலைவர் ஜெயஆரோக்கியராஜ். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், தோளூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# கடையநல்லூர் கம்பனேரி ஊராட்சி வலசையில் பெட்ரோல் பங்க் திறப்பு விழா நடைபெறவுள்ளது



தென்காசி,ஏப்.27–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஒன்றியம் கம்பனேரி ஊராட்சி வலசையில் முன்னாள் திமுக ஒன்றிய செயலாளர் இளங்கோவின் நல்லாசியுடன் தேவி பெட்ரோல் பங்க் திறப்பு விழா நடக்கிறது.

கடையநல்லூர் சேர்ந்தமரம் ரோடு வலசையில் இந்தியன் ஆயில் நிறுவனம் சார்பில் தேவி பெட்ரோல் பங்க் அமையப் பெற்றுள்ளது இந்நிகழ்ச்சிக்கு மாநில விவசாய அணி மாநில துணை அமைப்பாளர் ஆனைகுளம் அப்துல்காதர், திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும், தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் செல்லத்துரை ஆகியோர் தலைமை வகிக்கிறார்.

இந்தியன் ஆயில் நிறுவன மதுரை மண்டல அலுவலக துணை பொது மேலாளர் மகேஷ், மதுரை மண்டல அலுவலக சில்லறை விற்பனை மேலாளர் செந்தில்குமார், தென்காசி மாவட்ட சில்லறை விற்பனை மேலாளர் சதீஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கடையநல்லூர் ஒன்றியச் செயலாளர் சுரேஷ் அனைவரையும் வரவேற்றார். செயற்குழு உறுப்பினர் செல்லத்துரையின் தந்தை மாடசாமி, தாய் ஆலிஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று திறந்து வைக்கின்றனர்.

கடையநல்லூர் நகரச் செயலாளர் அப்பாஸ், நகராட்சி சேர்மன் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், துணைத்தலைவர் ராசையா, யூனியன் சேர்மன் சுப்பம்மாள் பால்ராஜ்,துணை சேர்மன் ஐவேந்திரன் தினேஷ், ஒன்றிய கவுன்சிலர்கள் அருணாசலபாண்டியன், சிங்கிலிபட்டி மணிகண்டன், பகவதியப்பன், சண்முகையா, ரோஜா முருகன், சித்ரா கண்ணன், நகர் மன்ற உறுப்பினர்கள் முருகன், சிட்டிதிவான் மைதீன், மாரி, மாலதி, தனலட்சுமி, தங்கராஜ், மேலகரம் சுபஸ்ரீ ரியல் எஸ்டேட் அருள், கோவை மோட்டார்ஸ் குமார், காளிமுத்து, திரிகூடபுரம் கிளை செயலாளர் சுப்பிரமணியன், மீரான், ராஜ், தங்கப்பாண்டியன், துரைக்கனி, பூரணசந்திரன், முத்துக்குமார், கம்பனேரி கணேசன், பண்டாரசாமி, குத்தாலிங்கம், பிள்ளையார் பாண்டியன், முருகானந்தம் புளியங்குடி நகரச் செயலாளர்எ. அந்தோணிசாமி, அருணாச்சலம், ராஜராஜன், பெருமாள் மாரிச்செல்வம், கவிதா மாரியப்பன், பொன்னுதுரைச்சி, வேல்சாமி பாண்டியன்,வாசு ரூபி பாலசுப்பிரமணியம், சுந்தர், மதி மாரிமுத்து , லாலா சங்கரபாண்டியன், தென்காசி நகர்மன்றத் தலைவர் சாதிர்,துணைத்தலைவர் சுப்பையா, ஷேக் அப்துல்லா சேர்மன், ஹக்கீம், வேலுச்சாமி, பாலீஸ்வரன்,இத்தாலியன் பீரப்பா , கண்ணன் எம்சி, முருகையா, நல்லையா , மதி, செய்யது மசூது, மாவட்ட பஞ்சாயத்து தலைவி தமிழ்ச்செல்வி போஸ், பண்பொழி பஞ்சாயத்துதலைவர் ராஜராஜன், வல்லம் ராஜா, புளியங்குடி நகர அவைத்தலைவர் வேலுச்சாமி பாண்டியன், யாசின், ஷாகீர்உஷேன், மாறன், உமா மகேஸ்வரி, காந்திமதி அம்மாள், மைதீன், பீர் ஒலி, வெங்கட்ராம ஐயர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மது போதையில் ஏற்பட்ட தகராறில் நண்பனை வெட்டி கொன்ற நண்பர்கள், சிறுவன் உள்பட 8 பேர் கைது. ஒருவர் தலைமறைவு

சென்னை, ஏப். 27 –


சென்னை, வியாசர்பாடி பாரதிநகரை சேர்ந்தவர் சஞ்சய் (வயது 22). பெரம்பூரில் துணிக்கடை நடத்தி வந்தார். ரம்ஜான் பண்டிகையையொட்டி திருவொற்றியூர் எல்லையம்மன் கோயில் அருகில் கடற்கரை சாலையில் ரம்ஜான் விடுமுறை கொண்டாட இவரது நண்பர்கள் அஜித், ஹரி பிரசாத், சந்தோஷ், முபாரக், இம்ரான் ஆகியோர் மது குடித்து கொண்டு இருந்தனர்.

அவர்கள் அருகில் மது குடித்து கொண்டு இருந்த திருவொற்றியூர் பூங்காவன புரத்தை சேர்ந்த தேவராஜ் என்கிற தேவா (25) என்பவர் சஞ்சய் நண்பர் அஜீத்திடம் தீப்பெட்டி



கேட்டுள்ளார். இதில் வாய்த்தகராறு ஏற்பட்டு இரு தரப்பினருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது.

அப்போது அஜீத்துக்கு ஆதரவாக சஞ்சய், தேவாவை தாக்கி விட்டு மீண்டும் வண்ணாரப்பேட்டைக்கு சென்று மது குடித்துவிட்டு சஞ்சய் (வயது 22) திருச்சிணாங்குப்பம் கடற்கரையில் வந்து படுத்து உள்ளார். அப்போது திருவொற்றியூர் பூங்காவன புரத்தை சேர்ந்த தேவராஜ் (வயது 25), பிரதீப் (வயது 21), காலடிப் பேட்டையை சேர்ந்த பரத் (21), சந்தோஷ் (21), கணக்கர் தெருவை சேர்ந்த கிருஷ்ணா (வயது 21), ராஜா சண்முகம் நகர் பாலா (வயது 21), எல்.என்.ஜி. காலனியைச் சேர்ந்த சதீஷ் (வயது 23) ஆகிய 8 நபர்கள் சேர்ந்து சஞ்சையை சுற்றி வளைத்து கத்தியால் குத்தி உள்ளனர். அந்த கும்பலிடம் இருந்து



இறந்து போன இளைஞர் சஞ்சய் புகைப்படம்

தப்பித்து கடற்கரையை ஒட்டி உள்ள தெருவில் சஞ்சய் தப்பிக்க முயற்சி செய்தபோது 8 பேர் கும்பல் சஞ்சயை சரமாரியாக தாக்கினர். இதில் பலத்த காயம் அடைந்த சஞ்சய் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியிலே பரிதாபமாக இறந்து போனார்.

இந்த கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை போலீசார் 2 தனிப்படை அமைத்து தேடி வந்த நிலையில், நேற்று கொலை வழக்கில் தொடர்புடைய பி. ஏ. முதலாம் ஆண்டு படித்து வரும் பூங்காவனபுரத்தை சேர்ந்த சிறார் உள்பட 8 பேரையும் கைது செய்து கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும் தலைமறைவாக உள்ள பூங்காவனபுரத்தை சேர்ந்த தமிழரசன் (வயது 20) என்பவனை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

வரலாறு நாளிதழ்
நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை
காலிப் பணிஇடங்கள் 2
PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN
தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்
சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.
நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்
தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட
செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்
மேலும் தொடர்புக்கு :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# நாட்டின் ஒற்றுமைக்கு சவுராஷ்டிரா தமிழ் சங்கமம் வலு சேர்க்கிறது

# உதயநிதி, சபரீசனிடமிருந்து என்னைப் பிரிக்க பிளாக் மெயில் கும்பல் முயற்சி





# ரூ.44 லட்சத்துடன் வங்கி கேசியர் மாயம் விழுப்புரத்தில் பரபரப்பு


| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 27.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |

புதுகை
வரலாறு
நாளிதழ்

27.04.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்



பிட்டி தியாகராயர் , தமிழக அரசியல் தலைவர் (பி.1852) (இ.1925)



எஸ். சி. சி. அந்தோனிப்பிள்ளை , இந்தியத் தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி (பி.1914) (இ.2000)



பிரபஞ்சன் , தமிழக எழுத்தாளர், விமர்சகர் (பி.1945) (இ.2018)



நிக் கீர்யோசு , ஆத்திரேலிய தென்னிசு வீரர் (பி.1995)

## இன்றைய நினைவு நாள்



கு. ப. ராஜகோபாலன் , தமிழக எழுத்தாளர் (பி.1902) (இ.1944)



என். ஆர். தியாகராஜன் , தமிழக அரசியல்வாதி, விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1913) (இ.1969)



பெ. சு. மணி , தமிழகத் தமிழறிஞர், எழுத்தாளர் (பி.1933) (இ.2021)